

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (24.3.2025) முகாம் அலுவலகத்தில், வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் வேந்தர் டாக்டர் ஐசரி கே.கணேஷ் குடும்பத்தினருடன் சந்தித்து, தனது மகள் திருமண விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார். திருமதி துர்கா ஸ்டாலின் உடனிருந்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (24.3.2025) தலைமைச் செயலகத்தில், கன்னியாகுமரி மாவட்டம் அணுக்கனிம சுரங்க எதிர்ப்பு நிர்வாகிகள் அருட்பணி டன்ஸ்டன், அருட்பணி சில்வெஸ்டர் குரூஸ், அருட்பணி. ஜான் நிக்சன், அருள் ஆனந்தன், கேப்டன் ஜான்சன், சுதர்சன், நாகராஜன், மகேஷ், சிபில், சித்திக், கிறிஸ்டோபர், ஜெயசுந்தரம், பெர்லின், பேபி ஜான் ஆகியோர் சந்தித்து, மணவாளகுறிச்சியில் கனிம சுரங்க விரிவாக்கப் பணியினை தடுத்து நிறுத்திட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு கோரிக்கை மனு அளித்தனர். இச்சந்திப்பின்போது, அமைச்சர் தங்கம் தென்னரசு, சட்டமன்ற உறுப்பினர்கள் மனோ தங்கராஜ், எஸ். ராஜேஷ் குமார், இனிகோ இருதயராஜ், ஜெ.ஜெ. பிரின்ஸ், திருமதி தாரகை கத்பர்ட், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் மகேஷ், மீனவரணி செயலாளர் ஜோசப் ஸ்டாலின் ஆகியோர் உடனிருந்தனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளை

# உலகத்தில் இருக்கும் தமிழர் அனைவரும் கொண்டாடுகிறார்கள்!

## சென்னை கிழக்கு மாவட்டத்தில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் நடைபெற்ற முதல்வர் பிறந்த நாள் விழா

## வினாடி – வினா போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி திருமதி. ஆனி ராஜா புகழாரம்!

**சென்னை, மார்ச் 26 -**

**சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மக்களின் முதல்வர் மனிதநேய விழாவை முன்னிட்டு அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் நடைபெற்ற வினாடி வினா இறுதி போட்டியில் இந்திய தேசிய பெண்கள் கூட்டமைப்பினுடைய பொதுச் செயலாளர் திருமதி. ஆனி ராஜா வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி ஆற்றிய உரை வருமாறு:-**

நான் ஓர், இரண்டு விஷயங்கள் - வார்த்தைகள் பேசுவதற்கு முன்பு, முதலில் நம்முடைய முதலமைச்சர் தளபதி ஸ்டாலின் அவர்களின்72-வது பிறந்தநாளையொட்டி, தமிழ்நாட்டில் இருக்கும் மக்கள் மட்டுமல்லாமல் - உலகத்தில் இருக்கும் அத்தனை தமிழர்களும் இந்தப் பிறந்த நாளை கொண்டாடிக் கொண்டிருக்கும்போது, நானும் உங்களோடு சேர்ந்து அவர்களுக்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துகளைச் சொல்வதோடு,வரும் 2026 தேர்தலில் நீங்கள் தான் வெற்றி பெற வேண்டும்.

இன்றைக்கு,இந்தியாவிற்கேவழிகாட்டிக் கொண்டிருக்கும் - இந்தியாவின் ஜனநாயகத்தை - இந்தியாவின் கூட்டாட்சித் தத்துவத்தை - இந்தியாவின் மதச்சார்பின்மையை காப்பாற்றுவதற்காக - இந்தியாவில் இருக்கிற மக்களைச் சேர்த்துக் கொண்டு போராடிக் கொண்டிருக்கும் தமிழ்நாட்டின் முதலமைச்சருக்கு எல்லா விதமான வளங்களும் கிடைக்க வேண்டும்.

இப்போது இங்கே நம்முடைய தளபதி பிறந்த நாள் வித்தியாசமாக கொண்டாடப்படுகிறது. வேறு எந்த மாநிலங்களிலும் ஒரு முதலமைச்சர் பிறந்தநாளை இது போன்று கொண்டாடியது கிடையாது. பெரிய கூட்டங்கள் போடுவார்கள்; கொஞ்சம் உரைகள் இருக்கும்; கேக்வெட்டுவார்கள்; அதெல்லாம் தவறு.

அதோடுமக்களைச் சேர்த்து - இளம் தலைமுறையைச் சேர்த்து, அதுவும் அவர்களுக்கு சும்மா ஒரு டிராஃபி கொடுத்து, பிஸ்கட் கொடுத்து சேர்ப்பது கிடையாது; இந்த உலகத்தில் முக்கியமான அம்சம் என்ன என்று கேட்டால், அது அறிவு தான்.இந்த காலத்தில் அறிவு இருந்தால் தான் வாழ முடியும் என்ற நிலைமைக்கு வந்திருக்கிறோம். அந்த அறிவை போற்றுவதற்காக - அந்த அறிவை கற்பதற்கான ஒரு உற்சாகத்தை கொடுக்கும் முறையில், இது போன்று போட்டி ஏற்பாடு செய்து பிறந்த நாளை கொண்டாடுவது, மிகப் பெரிய உதாரணமாக இருக்கிறது.

### இளைஞர்களுக்கான போட்டிகள்!

இதற்கு நிறைய சுற்று இருந்தது. முதலில்,18 வயதிற்கு மேல் இருப்பவர்கள் - 18 வயதிற்கு கீழ் இருப்பவர்கள் என நூற்றுக் கணக்கானோர் பங்கேற்றுள்ளனர். அதிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இறுதிப் போட்டியாளர்களைத்தான் நாம் இப்போது மேடையில் பார்த்தோம். எவ்வாறு ஒரு கடுமையான போட்டியாக நடந்தது என்பதைப் பார்த்தோம். அதிலும் குறிப்பாக மாஸ்டர் சொன்னது, நிறைய கேள்விகள் பதில் அளிக்காமல் சென்றது கிடையாது. அது நாம் பார்க்க வேண்டிய விஷயம்.

அதற்கு அர்த்தம் என்ன? இளம் தலைமுறைகளை அறிவிருப்பவர்களாக வளர்த்துக் கொண்டு வருவதில் தமிழ்நாட்டில் இருக்கும் தி.மு.க. அரசு - அதன் முதலமைச்சர், அந்த ஒரு நோக்கத்தோடு அவர்கள் பணியை ஆற்றி வருவதுதான் அர்த்தம்.

நான் இங்கு வரும்போது,என்னுடைய ஒரு நண்பர் சில விஷயங்களை எனக்கு அனுப்பினார்கள். அதில் என்ன சொல்லி இருந்தார்கள் என்றால், இங்கு குழந்தைகளின் கல்விக்காக நிறையத்திட்டங்கள் தளபதி ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சர் ஆன பிறகு கொண்டு வந்திருக்கிறார்கள்.

### சிறார்களுக்கான காலை உணவுத் திட்டம்!

இன்றைக்கு இருக்கும் பிரச்சினை என்ன? அந்தப் பிரச்சினையை முடித்து,தமிழ்நாட்டில் இருக்கும் அத்தனை குழந்தைகளுக்கும் கல்வியை கொடுப்பதற்கான திட்டங்கள் கொண்டு வந்திருக்கிறது என்று சொன்னார்.

இந்தியாவில் 6 வயது முதல்16 வயது வரை இன்றைக்கு இருக்கும் குழந்தைகளில் 18 சதவிகிதம் குழந்தைகள் ஒன்றாம் வகுப்பு படிப்பு கூட இல்லாமல், பள்ளிக்கூட கேட் வர முடியாம இருக்கும் சூழ்நிலையில்தான், இங்கே குழந்தைகள் படிக்க வேண்டும்; அதற்கு மதிய உணவு மட்டும் போதாது;அவர்களுக்கு காலை உணவும் தேவைப்படுகிறது என்று, வயிறுப் பசியை போக்குவதற்காக இல்லாமல், அவர்களுக்கு சத்துணவு வழங்கப்படுகிறது. அது அவர்களுக்கு படிப்பிற்கு முக்கியம் என்பதை புரிந்து, முதல் முறையாக இந்தியாவில் வேறு எந்த மாநிலத்தில் அரசு பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளுக்கு இந்த காலை உணவு திட்டம் கொடுக்க ஆரம்பித்திருக்க மாட்டார்கள். அது இங்குதான் நடந்திருக்கிறது.இதை மற்ற மாநிலங்களுக்கு ஒரு முன் உதாரணமாக எடுத்துக் கொண்டு,முயற்சி செய்ய வேண்டும் என்று சொல்கிறது.

அது மட்டுமல்ல, குழந்தைகளுக்கு 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் படித்து கல்லூரி செல்லும் மாணவிகளுக்கு மாதா மாதம் 1,000 ரூபாய் தருகிறார்கள் என்று இப்போது நான் இங்கு வரும்போது சொன்னார்கள்.

இதெல்லாம் எதற்கு? ஓட்டு வாங்குவதற்காக கிடையாது. இங்கே இருக்கும் மக்களுக்கு, அரசியல் சாசனத்தை தொட்டு முதலமைச்சராக ஆட்சிக்கு வரும்போது, ஒரு உறுதிமொழி எடுத்து வருவார்கள்.இங்கிருக்கும் ஒவ்வொரு நபருக்கும், அவர்களுடைய அடிப்படை உரிமைகளைக் கொடுப்பதற்குதான் அந்த அரசியல் சாசன சட்டத்தின் மேல் கை வைத்து, அந்த சபதத்தை படித்து, ஆட்சியில் அமர்கிறார்கள்.



மக்களுக்கு ஆட்சியில் பங்கு இருக்கிறது; அவர்களுக்கான அடிப்படை உரிமைகளை சாதித்து கொடுக்க வேண்டும் என்ற உத்தரவாதத்தை முதலமைச்சராக அந்த நாற்காலியில் அமர்ந்திருக்கும்போது, அந்தக் கடமையை பூர்த்தி செய்வதற்காக - அந்த கடமையை நிர்வகிக்க தான் இவ்வாறு செய்வது.

இந்தியாவில் இருக்கும் நூறு குழந்தைகளை ஒன்றாம் வகுப்பில் சேர்த்தால், நான்காம் வகுப்பு வருவதிற்குள் அதில் 60 குழந்தைகள்காணாமல் சென்று விடுகிறார்கள்; அதற்குப் பிறகு வருவதில்லை.

இதுபோன்று இருப்பதற்கு முக்கியமான காரணம் என்ன என்று கேட்டால்,1. வறுமை,2. சரியான கல்வியை சொல்லிக் கொடுப்பதற்கு ஆள் இல்லாமல்,3. பள்ளி எங்கேயோ இருக்கிறது;வீடு எங்கேயோ இருக்கிறது.வறுமை என்ற காரணத்தில்தான் அதிகமான குழந்தைகள் பள்ளி செல்லாமல் நின்று விடுகிறார்கள்.

### ஆரோக்கியமான குழந்தைகள்!

குழந்தைகளுக்கு சாப்பாடு கொடுக்கிறோம் என்று சொன்னால், அது அவர்களுடைய பசியைப் போக்குவதற்கு மட்டுமல்ல; அடிப்படை உரிமையை வழங்குவதற்கும்தான். சத்துணவாக இருந்தால் தான், குழந்தைகள் ஆரோக்கியமாக இருக்கும்; ஆரோக்கியமான குழந்தையால்தான் கல்வியை கற்க முடியும். அதை தெரிந்து தான், இங்கு இது போன்று கொண்டு வந்திருக்கிறார்கள்.

டெல்லியில் ‘ரைட் டு ஃபுட் கேம்பைன்’ என்று ஒன்று இருக்கிறது.அதில் பெண்களைப் பற்றி சொன்னோம். முதலில் கர்ப்பிணிப் பெண்களை பற்றி சொன்னோம்.

சில வருடங்களுக்கு முன்பு, சென்னையில் ஒரு மருத்துவர், மருத்துமனை நடத்திக் கொண்டிருக்கிறார். நாங்கள் ஒரு விஷயமாக அங்கு சென்றோம்.அப்போது மருத்துவரிடம் பேசும்போது, நான் ஒரு மருத்துவமனை கட்டியிருந்தாலும், எனக்கு ஒரு கவலை இருக்கிறது. ஏன் என்று கேட்டால், அரசு மருத்துவமனையில் தி.மு.க. அரசு வந்த பிறகு, பிறக்கும் குழந்தைகளுக்கும் - அவர்களது அம்மாவிற்கு எவ்வளவு விஷயங்களை செய்கிறார்கள். அதனால் எல்லோரும் இப்போது அரசு மருத்துவமனைக்கு செல்கிறார்கள். நான் கட்டியிருக்கும் மருத்துவமனைக்கு சும்மா இருந்து விடுமோ என்று எனக்கு ஒரு பயம் இருக்கிறது என்று தமிழ்நாட்டில் இருக்கும் ஒரு மருத்துவர் சொன்னதுதான், நான் சொல்வது.

### பெண்களுக்கான திட்டங்கள்!

எனவே, பெண்களுக்கு எவ்வளவு செய்திருக்கிறார்கள் என்று பட்டியல் எடுத்துச் சொல்ல வேண்டும் என்றால் முக்கால் மணி நேரம் ஆகும். அதற்கு நான் தயாராக இல்லை. ஏனென்றால், இந்தப் பரிசு கொடுப்பதற்கும் - பரிசு வாங்குவதற்கும், நம்முடைய உட்கார்ந்திருக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுவதைக் கேட்பதற்காகத்தான் நீங்கள் காத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பது எனக்கு தெரிகிறது.

ஆனாலும், பெண்களுக்காக செய்திருப்பதைப் பற்றி ஒன்று, இரண்டு வார்த்தைகள்நான் சொல்லாமல் சென்றால், அது மிகவும் தவறாக இருக்கும். எனவே, சொல்லித்தான் ஆக வேண்டும்.

பெண்கள் பேருந்தில் டிக்கெட் எடுக்காமல் இலவசமாக செல்லலாம். நிறைய ஆண்கள் பேசுவதை நான் கேட்டிருக்கிறேன், பெண்களுக்கு மட்டும் தான் கொடுக்கிறார்கள் என்று ஆண்களுக்கு பொறாமையாக இருப்பது தெரிகிறது.

ஆனால், பெண்கள் பேருந்தில் டிக்கெட் எடுக்காமல் இலவசமாக பயணம் செய்யலாம் என்று சொல்வது, என்னென்ன விளைவுகளை ஏற்படுத்தும் என்றால்,ஒரு மாதத்திற்கு ஆயிரம் ரூபாய் அதிகம் நமக்கு கிடைப்பதனால் அது ஒரு குடும்பத்திற்கு எவ்வாறு உதவுமானால், ஒரு லிட்டர் எண்ணெய் அதிகமாக வாங்கலாம்; ஒரு கிலோ தக்காளி அதிகமாக வாங்கலாம்; ஒரு கிலோ பருப்பு அதிகமாக வாங்கலாம்; அதன் வழியில் அந்த குடும்பத்தில் உள்ளவர்களின்உடல்நிலை மேன்மை அடைகிறது. பொருளாதார மேம்பாடு - பெண்களுக்கும், குடும்பத்திற்கும்; அது தான் இந்த பெண்களுக்கு பேருந்தில் இலவசப் பயணம் என்பதன் அர்த்தம். அதற்காக, தளபதி அவர்களுக்கும் - இந்த அரசுக்கும் நான் மிகவும் நன்றி சொல்கிறேன்.

### உலகம் முழுவதும் தமிழ்நாட்டின் பெயர்!

இந்தப் போட்டியில் பங்கெடுத்த அனைத்து குழந்தைகளுக்கும், இளைஞர்களுக்கும் நான் சொல்ல விரும்புவது என்னவென்றால்,இன்றைக்கு மதிய உணவில் பாதி மட்டும் சாப்பிட்டு,மீதியை வீட்டுக்கு எடுத்துச் சென்று பட்டினியாக இருக்கும் அம்மாவிற்கும், இளைய தம்பிக்கும் - தங்கச்சிக்கும் - அக்காவிற்கும் கொடுக்கும் நாடு, நம்முடைய நாடு. அது போன்ற நாட்டில்தான், காலை உணவு முதல் மதிய உணவு வரை கொடுத்து குழந்தைகளை படிக்க வைப்பது ஒரு பெரிய விஷயம்.

இதுபோன்று,நாம் கல்வி கற்க, நமக்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. அந்த வாய்ப்பை சரியான விதத்தில் பயன்படுத்தி, நம்முடைய அறிவை வளர்த்து, எந்த அளவுக்கு நாம் மேலே செல்ல முடியுமோ, அந்த அளவிற்கு மேலே செல்வதற்காக படித்து- அறிவு பெற்று- கல்வி பெற்று, மேலும் மேலும் சென்று, தமிழ்நாட்டின்பெயரை உலகம் முழுவதும் கொண்டு செல்ல வேண்டும். அதுதான் இன்றைக்கு இந்தப் போட்டியில் பங்கு பெற்றவர்களுக்கும் - இளைஞர்களுக்கும் – குழந்தைகளுக்கும் சொல்வதற்கு இருக்கிறது.

அதேபோன்று, நம்முடைய அரசியல் சாசனம்,‘இந்துக்களாகிய நாம்’ என்றோ, ‘முஸ்லிம்களாகிய நாம்’ என்றோதொடங்கவில்லை; அதனுடைய முகப்புரை தொடங்கவில்லை. ‘இந்தியர்களாகிய நாம்’ என்றுதான் தொடங்குகிறது. எந்த பாரபட்சமும் இல்லாமல், இங்கே கல்வி கற்பதற்கு - இங்கே வேலை செய்வதற்கு - இங்கு வாழ்வதற்கான ஒரு சூழல் இருக்கும் தமிழ்நாட்டில், இந்த மதச்சார்பின்மையை காப்பாற்றுவதற்காக, இளைஞர்கள் - குழந்தைகள் எல்லாம் அதற்கான அர்த்தத்தை சரியாக புரிந்து, மதச்சார்பின்மையை காப்பாற்றுவதற்காக நீங்கள் எல்லோரும் முன்னணியில் நிற்க வேண்டும் என்று உங்களோடு சொல்லி, இந்த இளைஞர்களுக்கும், குழந்தைகளுக்கும் எல்லாவிதமான வாழ்த்துகளும், உங்கள் வாழ்க்கையில் நிறைய வெற்றிகள் உண்டாகட்டும் என்று வேண்டிக் கொண்டு, இங்கு தளபதி அவர்களின் பிறந்தநாளையொட்டி நடக்கும் இந்தப் போட்டியில் இறுதி நாளில், பரிசு கொடுக்கிறோம் என்று சொன்னால், எனக்கே பாரத ரத்னா கிடைத்தது போன்று உணர்வு இருக்கிறது.இது எனக்கு கிடைத்த மிகப்பெரிய மரியாதை.

நாம் எல்லோரும் சேர்ந்து, தமிழ்நாடு இன்னும் மேல் செல்வதற்கு பாடுபடுவோம். தமிழ்நாடு இன்னும் வெல்ல வேண்டியது நிறைய இருக்கிறது.

நேற்று இங்கு ஒரு கூட்டம் நடந்தது. தொகுதி மறுசீரமைப்பு சம்பந்தமாக நடந்த கூட்டம். அது மட்டும் அல்ல, நமக்கு கிடைக்க வேண்டிய நம்முடைய உரிமைகளை தடுத்து நிறுத்தி வைக்கும்படியான ஒரு ஆட்சி ஒன்றியத்தில் இருக்கும் நிலைமையில், அந்த ஒன்றியத்தோடும் நாம் போட்டியிட வேண்டியதாக இருக்கிறது. இங்கே நம்முடைய மேம்பாட்டுக்கு எதிராக இருக்கும் அனைத்து தீய சக்திகளோடும் போட்டியிட வேண்டியதாக இருக்கிறது.

அந்தப் போராட்டத்தில் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து போராடுவோம் நாம்; வெற்றி பெறுவோம். இதுபோன்று ஒரு வாய்ப்பு எனக்கு தந்ததற்கு உங்கள் ஒவ்வொருவருக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு திருமதி ஆனி ராஜா உரையாற்றினார்.